127—

பேருந்து வசதி

***153497—முனைவர் தாரகை கத்பட்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதியில் இயக்கப்படும் தடம் எண் 86B மற்றும் 86E பேருந்துகளைக் கூடுதலாக இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தடம் எண் 86B/A மார்த்தாண்டம்-முக்கூட்டுக்கல் (வழி) குழித்துறை, மேல்புறம், மஞ்சாலுமூடு மார்க்கத்தில் 18 நடைகள் இயங்குகின்றன. தடம் எண் 86B/B மார்த்தாண்டம்-பனச்சமூடு (வழி) குழித்துறை, மேல்புறம், மஞ்சாலுமூடு, மாலைக்கோடு, இடைக்கோடு மார்க்கத்தில் 14 நடைகள் இயங்குகின்றன. தடம் எண் 86E மார்த்தாண்டம்-பனச்சமூடு (வழி) குழித்துறை, மேல்புறம், மஞ்சாலுமூடு, முக்கூட்டுக்கல், நாரகத்தன்குழி, மாங்கோடு மார்க்கத்தில் 14 நடைகள் இயங்கி வருகின்றன. இப்பேருந்துகள் சாதாரண கட்டணத்தில் மகளிர் கட்டணமில்லாமல் பயணிக்கின்ற வகையில் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகள் முழுமையான பயணி அடர்வுடன் இல்லை. எனினும், தடங்கலின்றி இயக்கப்படுகின்றன. இந்நிலையில், இத்தடத்தில் கூடுதல் பேருந்து வசதி ஏற்படுத்த தேவை எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் தாரகை கத்பட் அவர்கள்.

முனைவர் தாரகை கத்பட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் மலையும், கடலும் சார்ந்த பகுதியாகும். இந்தப் பகுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மகளிருக்கான இலவசப் பேருந்தை இயக்கியது

2024 ஜூன் 29]

மலைவாழ் மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. விளவங்கோடு தொகுதியின் மலைவாழ் மக்களின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, அந்தப் பேருந்துகள் இதற்கு முன்னர் கிராமங்களுக்குச் சென்று கொண்டிருந்தன. அதாவது, ஞாரம்விளை, அலுவிளை, பழங்கட்டி போன்ற பகுதிகளுக்குச் சென்ற பேருந்துகள், கடந்த 4 வருடங்களாகக் கிராமங்களுக்குச் செல்லாமல் நகரப் பகுதிகளுக்கு மட்டும் இயக்கப்படுகின்றன. அதனால் passengers அடுத்த பேருந்து வருவதற்காக, கிட்டத்தட்ட 4 மணி நேரம் வரை காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதனால் 86B–ஐயும், 86E–ஐயும் முன்புபோல பழைய வழித்தடத்தில் ஞாரம்விளை, பழங்கட்டி, அலுவிளை போன்ற கிராமங்கள் வழியாக இயக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 வருடங்களுக்கு முன்பாக இயங்கிவந்த பேருந்துகள் நிறுத்தப்பட்டுள்ளன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்கிறார்கள். 4 வருடங்களுக்கு முன்பு நிறுத்தப்பட்டிருக்கின்றன. அதாவது, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில். அப்போது பெரும்பாலான கிராமப்புறங்களுக்குச் செல்கின்ற வழித்தடங்களை எல்லாம் எடுத்து நகர்ப்புறப் பாதையிலே இயக்கினார்கள். அவர்கள் வசூலை மாத்திரம் கணக்கிட்டு, அவ்வாறு இயக்கியிருக்கிறார்கள். தற்போது அதுகுறித்து நீங்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதுகுறித்து ஆய்வு செய்து, அந்தக் கிராமங்களுக்கு மீண்டும் பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் தாரகை கத்பட் அவர்கள்.

முனைவர் தாரகை கத்பட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. அதுபோல, 311 என்ற பேருந்து மார்த்தாண்டம்-ஒருநூறாம்வயல் வரை இயங்கிக் கொண்டிருந்தது. இந்தப் பேருந்தானது ஆறுகாணி வரை தற்போது இயங்கிக் கொண்டிருக்கிறது. இதனால் ஒருநூறாம்வயலில் வாழ்கின்ற மலைவாழ் மக்கள் அவர்களுடைய இடத்திற்குப் போக முடியாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். அவர்களுக்கும் அந்தப் பேருந்தை பழைய வழித்தடத்தில் ஒருநூறாம்வயல் வரை இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். 11G என்ற வழித்தடத்தில் களியக்காவிளை, தக்கலை, மேல்புரம், மருதங்கோடு வழியாகச் சென்ற பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது. அதையும் மீண்டும் பழைய வழித்தடத்திலேயே இயக்குவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஆறுகாணியிலிருந்து சென்னைக்கு, தினமும் மக்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். ஆறுகாணியிலிருந்து நாகர்கோவிலுக்கு வரவேண்டுமென்றாலே கிட்டத்தட்ட 4 மணிநேரம் வரை ஆகின்றது. அது மலைசார்ந்த பகுதி. இங்கு வருவதற்கு மக்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. அங்கிருந்து தினமும் படிப்பதற்காகவும், வேலைவாய்ப்புகளைத் தேடியும் மக்கள் அதிக அளவில் சென்னைக்கு வருவதால் ஆறுகாணியிலிருந்து சென்னைக்கு பேருந்து விடப்படுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கன்னியாகுமரி மாவட்டத்தில் எல்லா ஊர்களுக்கும் பேருந்து கேட்டுவிட்டீர்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை பெரும்பாலும் நகர்ப்புறப் பகுதியாக இருப்பதால், பேருந்துகள் எல்லா பகுதிகளுக்கும் இயக்கப்படுகின்றன. ஒருசில குறிப்பிட்ட பகுதிகளுக்கு இயக்காமல் இருந்தால் அதுகுறித்து எழுத்துபூர்வமாக தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள்கூட வட்டவிளை என்னும் பகுதிக்கு இன்னும்

2024 ஜூன் 29]

பேருந்துகள் விடவேண்டுமென்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். இதுகுறித்து நான் துறை சார்ந்த அதிகாரிகளை ஆய்வு செய்யச் சொல்லியிருக்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களை அதுகுறித்து எழுத்துபூர்வமாக தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஆறுகாணி என்ற பகுதியை குறிப்பிட்டுச் சொன்னீர்கள். சென்னையிலிருந்து நாகர்கோவில் வரை வருகின்ற பேருந்தை நீட்டித்துக் கொடுத்தால் அவர்களுக்குப் பயனுடையதாக இருக்குமா என்பதைத் துறை சார்ந்த அதிகாரிகளிடம் ஆய்வு செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ் அவர்கள்.*

திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் தொகுதியில் கன்னையா நகர், பெரும்பாக்கம், செம்மஞ்சேரி ஆகிய திட்டப் பகுதிகளில் 50,000 குடும்பங்களுக்குமேல் வசித்து வருகிறார்கள். அவர்கள் சென்னைக்கும் மற்ற பகுதிகளுக்கும் செல்வதற்குக் கூடுதலாக வழித்தடங்களையும், கூடுதலாகப் பேருந்துகளையும் இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

அதேபோல, தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில், 2008 ஆம் ஆண்டு OMR, ECR, *வேளச்சேரி மெயின் ரோடு பகுதிகளிலெல்லாம் கூடுதலாக குளிர்சாதனப் பேருந்துகள் இயக்கப்பட்டன. அந்தப் பேருந்துகளெல்லாம் கடந்த கால ஆட்சியில் நிறுத்தப்பட்டன. அவற்றையும் அந்தப் பகுதிகளில் மீண்டும் இயக்க வேண்டுமென்று மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். அதேபோல, சோழிங்கநல்லூரரை தலைமையிடமாகக் கொண்டு தனியார் வாகனங்கள், அரசுப் பேருந்துகளெல்லாம் புறநகர்ப் பகுதிகளுக்கு அதிக அளவில் இயக்கப்படுகின்றன. எனவே, அங்கு ஒரு புறநகர்ப் பேருந்து பணிமனையை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்*

அவர்கள் கேட்டுக்கொண்ட அந்தப் பாதை குறித்து, ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும். அடுத்து, சோழிங்கநல்லூர் பகுதிக்கு குளிர்சாதனப் பேருந்துகள் இயக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். இப்போது பழைய பேருந்துகளை மாற்றி வருகிறோம். முதலில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் புதிய பேருந்துகள் வாங்குவதற்கான ஆணையை பிறப்பித்து, அந்தப் பேருந்துகளெல்லாம் வாங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, சென்னைக்கான தாழ்தளப் பேருந்துகள் ஜூலை மாதத்தில் வரவிருக்கின்றன. அந்தப் பேருந்து சேவை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பொற்கரங்களால் துவக்கி வைக்கப்பட இருக்கிறது. அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கூடுதல் பேருந்துகள் இயக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோன்று, பேருந்துப் பணிமனையைப் பொறுத்தவரை சென்னை மாநகரத்திலே போதுமான அளவுக்குப் பேருந்துப் பணிமனைகள் இருக்கின்றன. தற்போதுள்ள அரசினுடைய நிதிநிலையில் அந்தப் பகுதியில் பணிமனை அமைக்க வாய்ப்பில்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. தளபதி அவர்கள்.

திரு. கோ. தளபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரில் நிறைய போக்குவரத்து வசதிகள் இருந்தாலுங்கூட, 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் அளவிற்கு இந்த மினி பேருந்துகள் தேவைப்படுகின்றன. குறிப்பாக, மாட்டுத்தாவணியிலிருந்து அனுப்பானடிக்கும் அண்ணா நகர், கே.கே. நகர் வழியாக திருப்பாலையிலிருந்து மூன்றுமாவடி போன்ற வழித்தடங்களில் மினி பேருந்துகளை இயக்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மினி பேருந்துகள் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் காலத்தில் கொண்டுவரப்பட்டு, கிராமப்புறப் பகுதிகளில் எங்கெல்லாம் அரசுப் பேருந்துகள்

2024 ஜூன் 29]

இயக்கப்படாமல் இருந்தனவோ, அந்தப் பகுதிகளில் இயக்கப்பட்டு, அந்தப் பகுதி மக்களுக்குப் பெரும் உதவியாக இருந்தன. இது கடந்தகால ஆட்சியிலே புறக்கணிக்கப்பட்டு இருந்தது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், அந்த மினி பேருந்துகளை மீண்டும் பழையபடி சிறப்பான முறையில் இயக்குவதற்கு ஒரு புதிய வரைவுக் கொள்கையை வகுத்து அளிக்கச் சொல்லியிருக்கிறார்கள். அடுத்த மாதம் அதுகுறித்து உள் துறைச் செயலாளர் அவர்கள், மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தயிருக்கிறார்கள். அது முடிந்த பிறகு, புதிய மினி பேருந்துகளுக்கான வழித்தடங்கள் வழங்கப்படும். அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தேவைப்படுகிற இடங்களுக்கு அவரே வழித்தடத்தை வாங்கி பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 128, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

128—

திருப்பணி

***75395—திரு. கா. அண்ணாதுரை:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, ஆலத்தூர் ஊராட்சி, முசிறி அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) முசிறி, அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலில் ஏற்கெனவே 5 பணிகள் மேற்கொள்ளப்பட்டு,